# " நாரதர் "

192, ஸர் ஹபிபுல்லா ரோடு,

தியாகராய நகர், சென்னை-17.

போன் : 88654

அன்பரே !

அம்மணி !

நமஸ்காரம். சுமார் இருபத்து மூன்று ஆண்டுகளாக, சங்கீதம், நடனம், நாடகம், சினிமா ஆகிய அருங்கலைகளுக்குக் கௌரவமான முறையில் என்னு லியன்ற சேவை செய்து வந்திருக்கிறேன்.

இளங்கலைஞர்களுக்கு ஊக்கமளித்து அவர்களை முன்னணிக்குக் கொண்டு வருவதும், எவரது உள்ளத்தையும் புண்படுத்தாத முறையில் அவரவரது குறைகளைக் கண்ணியமாக எடுத்துக் கூறுவதும், நாட்டின் பல பகுதிகளிலு முள்ள தமிழர்களின் கலைத்தொண்டைப் பலரறியச் செய்வதும் எனது நோக்க மாக இருந்துவந்திருக்கிறது. இதன் பயனாக காஷ்மீரம் முதல் கதிர்காமம் வரையுள்ள பல்லாயிரவரது அபிமானத்தையும், தொடர்பையும் பெறும் வாய்ப்புக்கிட்டியது.

அவர்களனைவருக்கும் தொடர்ந்து சேவை செய்யவேண்டுமெனும் ஆர்வத்தில், **நாரதர்** என்ற பத்திரிகையை, மாத மிருமுறையாக என் சொந்தத்தி லேயே, வரும் சித்திரை மாதத்திலிருந்து வெளியிடத் தீர்மானித்திருக்கிறேன்.

கலை அன்பர்களுக்குக் களிப்பைத் தரக்கூடிய பல விஷயங்களும், பிரபல நாவலாசிரியர் ஒருவரது தொடர் நாவலும், பிரயாணக்கட்டுரையும், நட்சத்திர போட்டோக்களும், சித்திரங்களும் அதன்மூலம் அளிக்கப்பட விருக்கின்றன. எனது லக்ஷ்யம் ஈடேறத் தங்களது பேராதரவைக் கோருகிறேன்.

சென்னை,
14-3-59.

இப்படிக்கு,

**நாரதர் ஸ்ரீநிவாச ராவ்,**

ஆசிரியர்.